அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை, இல. 288

அரசாங்க நிருவாக அமைச்சு.
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
2, மே, 1985

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

1980 ஜூலை மாதத்தில் பதவியை விட்டு நீங்கிய பின் மீளச் சேவைக்கமர்த்தப்பட்ட அல்லது ஓய்வுபெற்ற அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய வேதனங்களும் ஓய்வூதியமும்

1980 ஜூலை மாதத்தில் பதவியை விட்டு நீங்கிய பின்னர் மீளச் சேவைக்கமர்த்தப் பட்ட சில அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு

(அ) அவர்களை மீளச் சேவைக்கமர்த்திய பின்பும் 29-12-1981 ஆம் திகதிய 197-ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின்படி அமைந்த புதிய திரட்டிய சம்பள அளவுத் திட்டங்களையும் அதன்பின் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் கருத்திற் கொள்ளாது 1980-இல் நடைமுறையிலிருந்த அளவுத் திட்டங்களின் அடிப்படையில் வேதனங்கள் வழங்கப்படுவதுடன்

(ஆ) ஓய்வு பெற்றவர்களின் விடயத்தில் 197-ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய திரட்டிய சம்பள அளவுத் திட்டங்களையும் அதன் பின் எடுக்கப்பட்ட தீர்மானங்களையும் கருத்திற் கொள்ளாது மேற்குறித்தது போன்று 1980-இல் நடைமுறை யிலிருந்த சம்பள அளவுத் திட்டங்களின் பேரில் அவர்களின் ஓய்வூதியம் கணிக்கப்படுகிறது.

02. ஆகவே 1.1.1982-ஆம் திகதிக்குப் பின்னர் மீளச் சேவைக்கமர்த்தப்பட்ட அரசாங்க உத்தியோகத்தர்களின் வேதனங்களையோ ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதி யங்களையோ கணிக்குமிடத்து 29-12-1981-ஆம் திகதிய 197-ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைக்கும் புதிய சம்பள அளவுத் திட்டத்தின் பேரில் பின்னர் எடுக் கப்பட்ட தீர்மானங்களுக்கும் இணங்க நடந்து கொள்வீர்களாகில் நன்று.

ஒப்பம். டி. பி. ஜ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.